# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 19.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண்.SA5810/F/2019**

திரு P. முனுசாமி ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்,
இயக்கமும் பராமரிப்பும்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
வந்தவாசி,
திருவண்ணாமலை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 13.03.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 01.05.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 21.06.2019 |

******

# ஆணை

இன்று (19.09.2019) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு P. முனுசாமி மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு S.இராமசாமி, செயற்பொறியாளர்/இயக்குதலும் பராமரித்தலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 13.03.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், பட்டா எண்.411, சர்வே எண்.542/1A, சர்வே எண்.630, மின் இணைப்பு எண்.300 சேதாரகுப்பம் கிராமம் SS1 டிரான்ஸ்பர் வழங்கப்பட்ட மின் இணைப்புக்கான கோப்புக்களை வழங்குமாறு கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், உதவி மின்

பொறியாளர் அலுவலகம், மருதாடு, வந்தவாசி வட்டம் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. 23.04.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் மூன்றாம் நபர் தொடர்பான தகவல் என்பதால் வழங்க இயலாது என தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை எனவும், தான் கோரிய தகவல்களை பெற்று வழங்குமாறும் கேட்டு, 01.05.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்கவில்லை என தெரிவித்தும், தான் கோரிய தகவல் பெற்று வழங்கவும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 21.06.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் மூன்றாம் நபர் தொடர்பான தகவல் என்பதால் வழங்க இயலவில்லை என தெரிவித்தார். மேலும் ஆணையம் அனுமதியளித்தால் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

5. விசாரணையின்போது ஆஜரான மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல்களை தனக்கு பெற்று வழங்குமாறு ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார்.

6. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு வழங்குகிறது:

**மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 13.03.2019 தேதியிட்ட மனுவில் கோரிய தகவல் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- ச.த. தமிழ்குமார்**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.SA5810/F/2019</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்,
இயக்கமும் பராமரிப்பும்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
வந்தவாசி,
திருவண்ணாமலை மாவட்டம்.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு P. முனுசாமி,
த/பெ. பெருமாள் கவுண்டர்,
பிள்ளையார் கோவில் தெரு,
சேதாரகுப்பம் கிராமம்,
வந்தவாசி வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம் - 604 408.

**Copy to: Judgement File.**

**Spare/ AM/PS - 240919**